செ.வெ.எண்: 299 நாள்: 9.4.2020

**கொரோனா வைரஸ் தாக்கம் முழுமையாக விடுபடவில்லை என்பதை பொதுமக்கள் உணர்ந்து வீட்டிலேயே இருக்க வேண்டும்.**

**பொதுமக்களின் இல்லங்களுக்கு செல்லும் பொருட்களின் வாயிலாக கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கை.**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவின் பால் பாக்கெட்களில் "விழித்திரு, விலகியிரு, வீட்டிலேயே இரு" என்ற விழிப்புணர்வு வாசகங்கள் அச்சடித்து வழங்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

கொரோனா வைரஸ் தாக்கம் முழுமையாக விடுபடவில்லை என்பதை பொதுமக்கள் உணர்ந்து வீட்டிலேயே இருக்க வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

பொதுமக்களின் நலனுக்காக தமிழக அராசல் அறிவிக்கப்படும் உத்தரவுகளை அனைவரும் தவறாது பின்பற்ற வேண்டும். குறிப்பாக கொரோனா வைரஸ் தாக்கம் முழுமையாக விடுபடவில்லை என்பதை பொதுமக்கள் உணர்ந்து வீட்டிலேயே இருக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு நடமாடும் ஆவின் பாலகம், நடமாடும் காய்கறி விற்பனை மற்றும் மளிகை பொருட்கள் பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே சென்று வழங்கிட மாவட்ட நிர்வாகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் தற்பொழுது பொதுமக்களின் இல்லங்களில் உள்ள தொலைக்காட்சிகளில் உள்ளூர் கேபிள் டிவி மூலமும், புதுக்கோட்டை மாவட்ட

பொதுமக்களின் கைபேசி எண்களிலும் கொரோனா வைரஸ் விழிப்புணர் நடவடிக்கைகள் அதிக அளவில் தெரிவிக்கப்பட்டு வருகிறது. மேலும் வீடுகளுக்கு வழங்கப்படும் கேஸ் சிலிண்டர்களிலும் கொரோனா குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு உள்ளது.

தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவின் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பால் பாக்கெட்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் தங்களை காத்துக்கொள்ள தீவிரமாக பின்பற்ற வேண்டிய "விழித்திரு, விலகியிரு, வீட்டிலேயே இரு" என்ற கோட்பாட்டினை அச்சடித்து வழங்கப்படுகிறது.

பொதுமக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வருவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்ற செய்தியை மீண்டும், மீண்டும் மாவட்ட நிர்வாகத்தால் தொடர்ந்து இதுபோன்ற பல்வேறு வழிமுறைகளால் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இதற்கு பொதுமக்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**